SAS SCHOOL OF ARTS AND SCIENCE
ISO 21001:2018 CERTIFIED
VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
Deemed to be University under section 3 of the UGC Act 1956

# பேச்சுப் பயிற்சிப் பட்டறை

**அறிக்கை (Report )**

| | | |
|---|---|---|
| நிகழ்வின் பெயர் | | :பேச்சுப் பயிற்சிப் பட்டறை |
| நாள் | | : 21 .09 .2024. |
| இடம் | | : சேப்பாக்கம், சென்னை |
| பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | | ; 7 + 1 |

நடப்பு கல்வியாண்டில் (2024-2025) விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை வளாகத்திலுள்ள கலை மற்றும் அறிவியல் புலத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கலைத் துறை சார்ந்த பயிற்சிகள் தரப்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தில் மட்டுமின்றி வெளி இடங்களில் நடக்கும் பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புகளும் உண்டாக்கித் தரப்படுகிறது.

**தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு** என்கிற அமைப்பு தமிழகம் முழுவதுமுள்ள மாணவர்களுக்குப் பேச்சுத் திறனை வளர்க்கும் விதமாக பேச்சுப் பயிற்சிப் பட்டறை என்கிற நிகழ்வை ஒருங்கிணைக்கும் அறிவிப்பைப் பார்த்து, அந்த நிகழ்வில் நமது கல்லூரியில் பயிலும் ஆர்வமுள்ள மாணவி மாணவர்களை கலந்து கொள்ள வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, தமிழ்த்துறை மூன்றாம் ஆண்டு மாணவி புவனேஷ்வரி, இயற்பியல் இரண்டாமாண்டு மாணவிகள் ஸ்ரீ வாணி ஸ்ரீ, அபிநயஸ்ரீ, கணினித்துறை இரண்டாமண்டு மாணவர்கள், ரஞ்சித், ஆனந்தபாபு, வணிகவியல் இரண்டாமாண்டு மாணவர் சுரேந்தர் மற்றும் பயன்பாட்டு கணினி (BCA) இரண்டாமாண்டு மாணவர் சிவசக்தி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுப் பயிற்சி நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக ஈழத்து மூத்த கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் தமிழகத்தின் சிறந்த பேச்சு ஆளுமையான திரு நாஞ்சில் சம்பத் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக வந்து மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளித்தனர்.

பேச்சுக் கலையில் ஆர்வமுள்ளவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய வாசிப்பு, ஒழுக்கம், நேரம் தவறாமை, சமூக அக்கறை, சமயோசிதம், கூர்மையான கவனம் உள்ளிட்ட முக்கிய பண்புகள் குறித்து மிக விரிவாக பாடம் எடுத்தார்கள்.

அவர்கள் இருவரும் சொன்ன கருத்துக்களை ஆர்வமாக உள்வாங்கிய மாணவர்கள் அவை குறித்து பல்வேறு ஐயங்களை எழுப்பினார்கள். அந்த ஐயங்களுக்கு ஆளுமைகள் இருவரும் மிக நேர்த்தியாகவும் சுவாரசியமாகவும் பதில் தந்து அரங்கை உற்சாகப்படுத்தினார்கள்.

காலை பத்து மணிக்கு தொடங்கிய இந்நிகழ்வு மாலை 4.30 மணி வரை நீண்டது. ஆனாலும் மாணவர்கள் சற்றும் ஆர்வம் குன்றாமல் உற்சாகமாக பங்கேற்றார்கள்.

பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு, தேநீர் வழங்கப்பட்டது. இறுதியாக அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் அளிக்கப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து கலந்து கொண்ட மாணவர்களுடன் பழகும் வாய்ப்பு நமது கல்லூரி மாணவர்களுக்கு புதிய அனுபவத்தைத் தருவதாக இருந்தது. மேலும் இவ்வாறான நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகுந்த உற்சாகமாகவும் புத்துணர்வாகவும் இருந்ததாகவும் வாழ்வில் சாதிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தை உண்டாக்குவதாகவும் குறிப்பிட்டார்கள். இப்படியானதொரு நிகழ்வுக்கு தங்களை அனுப்பி வைத்த கல்லூரி நிர்வாகத்திற்கும் இயக்குநர் கிறிஸ்டியானா சிங் அவர்களுக்கும் தமிழ்த்துறைத் தலைவரும் கல்லூரி உதவி இயக்குனருமான முனைவர் ப. ஜெயபாரதி அவர்களுக்கும் தங்களை இவ்வளவு தூரம் அழைத்து வந்து உடனிருந்து கவனித்துக் கொண்ட தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சா. திருவாசகம் அவர்களுக்கும் தங்களின் மேலான நன்றிகளைத் தெரிவித்தனர்.


நிருபர்கள் சங்கம்
REPORTERS GUILD
(ESTD 1955)


GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
378H+GHQ, Navalar Nagar, Chepauk, Triplicane, Chennai, Tamil Nadu 600005, India
Lat 13.066176°
Long 80.27874°
21/09/24 01:00 PM GMT +05:30
Google




தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்


தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்


தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்


தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்


தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்


தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
பேச்சுப் பயிற்சிப் பட்டறை
பார்வைநந்தன்
நாஞ்சில் சம்பத்

